DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -28

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.உஷாராணி | Caste: |
| Husband Name: | திரு. சச்சிதானந்தம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 23rd day of January -2024.

**A1 , A2, A5 toA7, A9, A13 to A18 present. A8, A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**23.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடியில் வசித்து வருகிறேன். கூலிவேலை செய்கிறேன். இறந்துபோன காசிநாதன், தர்மலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள். சம்பவதினத்தன்று நான் வயலுக்கு வேலைக்கு போய்விட்டேன். அன்று பகல் 11.00 மணிக்கு வீட்டிற்கு திரும்பி வந்தேன். நான் எதனையும் பார்க்கவில்லை. கொலை நடந்துவிட்டதாக கேள்விபட்டேன். எதற்காக மேற்படி கொலை நடந்தது யார் கொலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசர் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் நான் எங்கள் ஊரில் காளியம்மன் கோவில் கட்டியதால் சுமார் 10 வருடங்களாக காசிநாதனை சேர்ந்தவர்கள் ஒரு பிரிவாகவும், ரவிசந்திரனை சேர்ந்தவர்கள் மற்றொரு பிரிவாகவும் இருந்து வந்தார்கள் என்றும், ரவிசந்திரன் தரப்பை சேர்ந்த தேசிங்குபாலன் கொலை செய்யப்பட்டார் என்றும், அதனால் விரோதம் அதிகமானதாகவும், ரவிசந்திரன் தரப்பை சேர்ந்தவர்கள் காசிநாதன் மற்றும் அவரது குடும்பத்திரனை அடியோடு அழிக்கவேண்டுமென்று அடிக்கடி பேசிவந்தார்கள் என்றும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசார் விசாரணையில் நான் கடந்த 16.05.2008 அன்று காலையில் கூலி வேலைக்கு போய்விட்டதாகவும், அன்று மாலை 4.00 மணியளவில் எங்கள் ஊரில் கொலை நடந்துவிட்டதாக நான் கேள்விபட்டு வீட்டிற்கு வந்து பார்த்தபோது, அன்று காலை 10.00 மணியளவில் எதிரிகள் ரவிசந்திரனும், அவரது ஆட்களும் சுரேஷ், பிரபு, மகாலிங்கம், தர்மலிங்கம், காசிநாதன், ஜானகி ஆகிய 6 பேர்களை வெட்டிவிட்டதாகவும், ஜானகி ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருப்பதாகவும், மற்ற ஐவரும் வெட்டப்பட்ட இடத்திலிலேயே இறந்துவிட்டதாகவும் நான் கேள்விபட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவத்தன்று எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், பழனிசாமி, பிரபாகரன், ராஜதுரை, தினேஷ், ரமேஷ், பாஸ்கரன், திருவளப்புத்தூரான் ரமேஷ், சிலம்பரசன், சசிகலா, கனகவள்ளி, காளிதாஸ், ஸ்ரீதர், விஜய், ஜவகர்பாபு, சுரேஷ் ஆகியோர் அருவாள் கத்தியுடன் காசிநாதன் குடும்பத்தினரை வெட்டுவதற்காக பாலுசாமி வீட்டின் பின்புறம் பதுங்கியிருந்ததாகவும், வண்ணான்குளத்திற்கு சென்று குளித்துவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்த ராஜலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோர் குளித்துவிட்டு வரும்போது அவர்களை வழி மறைத்து எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம் ஆகியோர் சுரேசை வெட்டியதாகவும், எதிரிகள் பழனிசாமி, பிரபாகரன் ஆகியோர் பிரபுவை வெட்டியதாகவும், எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை காளியம்மன் கோவிலின் பின்புறம் கொ'ண்டுபோய் வைத்ததாகவும், எதிரிகள் ராஜதுரையும், தினேசும் மகாலிங்கத்தை வெட்டி கொன்றதாகவும், எதிரிகள் ரமேசும், பாஸ்கரனும்

தர்மலிங்கத்தை வெட்டியதாகவும், எதிரி ரமேஷ் தர்மலிங்கத்தின் தலையை காளியம்மன் கோவில் எதிரிலுள்ள சூலத்தில் குத்தியதாகவும், எதிரிகள் திருவனப்புத்துரான் ரமேஷ், சிலம்பரசன் ஆகியோர் காசிநாதனை வெட்டி கொலை செய்ததாகவும் நான் கேள்விபட்டதாக போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை.

போலிசார் விசாரணையில் நான் ரவிசந்திரன் தரப்பினர் சொல்லிகொண்டிருந்தது போல் பலநாட்கள் திட்டம் போட்டு ஒன்றுசேர்ந்து மேற்படி 5 நபர்களை வெட்டி கொன்றுவிட்டதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் நான் கேள்விபட்ட மற்றும் எனக்கு தெரிந்த உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.